# ஆந்திரத்தில் பேரறிஞர்கள் ஆற்றிய தமிழ் பணி

# Tamil Language Development taken by Scholars in Andhra

***முனைவர் பூ.சு.கணேஷ் மூர்த்தி***
உதவிப் பேராசிரியர்
தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிடப் பல்கலைக்கழகம்
குப்பம், ஆந்திரப்பிரதேசம், இந்தியா

**Dr. P. S. Ganesh Moorthy**
*Assistant Professor*
*Department of Tamil*
*Dravidian University*
*Kuppam, Andhra Pradesh, India*

## ஆய்வுச் சுருக்கம்

*தமிழ் மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாக பல அறிஞர்கள் இருந்துள்ளனர். தமிழ் மொழி உலக அளவில் வளர்ச்சியடைய பாடுபட்டுள்ளனர். அயல் நாடுகள் மற்றும் அயல் மாநிலங்களில் தமிழ் வளர பல அறிஞர்கள் பாடுபட்டுள்ளனர். தென்னிந்தியாவில் தமிழ் நாட்டிற்கு அருகாமையில் அமைந்துள்ள ஆந்திர மாநிலத்தில் தமிழ் மொழி வளர்ச்சி பெற காரணமாயிருந்த தமிழ் அறிஞர்களான சிலம்புச்செல்வர் ம.பொ. சிவஞானம், தஞ்சை தமிழ்ப் பல்கலைகழக மேனாள் முதல் துணைவேந்தர் பேராசிரியர். வடசேரி ஐயம்பெருமாள் சுப்பிரமணியம் மற்றும் திருவேங்கடப் பல்கலைகழகத் தமிழ் பேராசிரியர். ந. சுப்புரெட்டியார் போன்ற முப்பெரும் தமிழறிஞர்கள் ஆந்திர மாநிலத்தில் ஆற்றிய தமிழ் பணிகளை விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***திறவுச் சொற்கள்:*** *ம. பொ. சிவஞானம், வ. ஐ. சுப்பிரமணியம், சுப்புரெட்டியார், ஆந்திர மாநிலம், தமிழ் மொழி*

## Abstract

*Many scholars have contributed to the development of Tamil language. They have striven to develop the Tamil language globally. Many scholars have worked hard to develop Tamil in foreign countries and other states. Tamil Scholars like M.P.Sivagnanam, Professor Vadaseri Iyamperumal Subramaniam and Professor N. Subbu Reddiar were the reasons for the development of the Tamil language in the state of Andhra Pradesh, which is located close to Tamil Nadu. The purpose of this article is to describe the tamil work done by three great Tamil scholars in Andhra Pradesh.*

**Keywords**: *M.P.Sivajanam, Subbu Reddiar, V.I.Subramantam, Andhra Pradesh, Tamil Language*

**Citation**

Ganesh Moorthy, PS. “Tamil Language Development Taken by Scholars in Andhra.” *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 2, 2024, pp. 1–9.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20069262*

**அறிஞர்களின் வாழ்க்கை சுருக்கம்**

*ம.பொ.சிவஞானம் 26 சூன் 1906 - 3 அக்டோபர் 1995) 1956-ஆம் ஆண்டில், தமிழர்களுக்கென தமிழ்நாடு தனி மாநிலம் படைத்ததால் போற்றப்படுகிறார். தமிழகத்தைச் சேர்ந்த இந்திய விடுதலைப் போராட்ட வீரரும் சிறந்த தமிழறிஞரும் ஆவார். ஆந்திரம் தனி மாநிலமாக பிரிந்த பின்னர் ஆந்திரத்தில் வாழும் தமிழ் மக்களுக்காக பற்பல சேவைகளை செய்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். தமிழகத்தை ஒட்டியுள்ள சித்தூர் மாவட்டத்தில் வாழ்ந்திருந்த தமிழ் மக்களுக்கு (நகரி, புத்தூர், திருப்பதி) திரு. ம.பொ.சி. அவர்கள் உதவி செய்துள்ளதை இன்றளவும் மறக்க முடியாது. திரு.மங்களகிழாரிடம் தமிழை பயின்ற பல மாணாக்கர்களுக்குத் தமிழ்ப்புலவர் பயிற்சி ரே பெற உதவி செய்து அம்மாணவர்களுக்கு ஆந்திரத்திலேயே சித்தூர் மாவட்டத்தில் தமிழ் ஆசிரியர் பணி கிடைத்தது. அவர்கள் வாழ்வில் ஒளி விளக்காய் திகழ்ந்தவர் திரு.ம.பொ.சி. பெருந்தகையாகும்.*

*முனைவர் வ. ஐ. சுப்பிரமணியம் (வடசேரி ஐயம்பெருமாள் சுப்பிரமணியம், மொழியியல் அறிஞரும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் முதல் துணைவேந்தரும் ஆவார். தமிழ்ப் பல்கலைகழகத்தில் தொடர்ந்து இருமுறை துணைவேந்தராக சேவயாற்றியது குறிப்பிடதக்கதாகும் முனைவர் வ. ஐ.சுப்பிரமணியன் நாகர்கோயில் அருகில் உள்ள வடசேரியில் பிறந்தவர்.*

*வடசேரியில் தொடக்கக்கல்வி பயின்றவர் நெல்லை இந்துக்கல்லூரியில் இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்தார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்றார்.*

*ஐக்கிய அமெரிக்காவில் இந்தியானா பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் மொழியியலில் பெற்றார். இவர் சில காலம் புதுதில்லி அனைத்து இந்திய வானொலியிலும் பணியாற்றியுள்ளார். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களின் அன்புக்குரிய மாணவர். கேரளப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை வளர்ச்சியிலும் மொழியியல் துறை வளர்ச்சியிலும் மிகப்பெரிய பங்களிப்பு செய்தவர். தென்னிந்தியாவில் உள்ள ஆந்திர மாநிலத்தில் தமிழ் வளர்ச்சியடைய காரணமாயிருந்தவர். ஆந்திராவில் உள்ள குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் மூல கர்த்தாவாக விளங்கியதுடன் அப்பல்கலைக்கழகத்தின் முதலாவது இணைவேந்தராகவும் விளங்கியவரக பணியாற்றி ஒவ்வொரு அசைவையும் தன் பார்வையின் கீழ் வைத்து கட்டிடங்களுக்கு வழி வகுத்தவர் இவரே. 1997 ஆம் ஆண்டு தொடங்கிய இப்பல்கலைகழகம் இருபத்தைந்து துறைகள், முப்பத்திரண்டுகளோடு 2022 ஆம் ஆண்டு வெள்ளிவிழா நிறைவு செய்தது குறிப்பிடதக்கதாகும். இங்கு கல்வி பயின்ற மாணவர்கள் தேசிய பெற்றதோடு பல உயரிய பதவிகளில் பணியாற்றிக்கொண்டுள்ளனர்.*

*பேரசிரியர். ந. சுப்பு ரெட்டியார் தமிழறிஞரும், எழுத்தாளரும், பேராசிரியரும் ஆவார். இவர் எழுதியுள்ள 135 நூல்களையும் தமிழக அரசு நாட்டுடைமையாக்கியுள்ளது குறிப்பிடதக்கதாகும். பேரசிரியர்.ந. சுப்பு ரெட்டியார் தமிழ்நாடு, திருச்சி மாவட்டம், பெரகம்பி என்ற ஊரில் எளிய வேளாண்மைக் குடும்பத்தில் பிறந்தார். திருச்சி சூசையப்பர் கல்லூரியில் வேதியியலில் இளங்கலைப் பட்டமும், சென்னை பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டமும், திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றார். இவர் ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் 1960-ல் பல இன்னல்களுக்கிடையே தமிழ்த் துறையை நிறுவி 17 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றார். ஆந்திரத்தில் ஏற்பட்ட தமிழ்த் துறை இன்று பெரிய விரிஷ்சமாக மாறி அங்கு பயின்ற மாணக்கர்கள் உயரிய நிலையில் இருப்பதை அறியமுடிகிறது.*

**ம.பொ.சிவஞானம் அவர்களின் தமிழ் பணி**

*ஆந்திரம் தனி மாநிலமாக பிரிந்த பின்னர் ஆந்திரத்தில் வாழும் தமிழ் மக்களுக்காக பற்பல சேவைகளை செய்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். தமிழகத்தை ஒட்டியுள்ள சித்தூர் மாவட்டத்தில் வாழ்ந்திருந்த தமிழ் மக்களுக்கு (நகரி, புத்தூர், திருப்பதி) திரு. ம.பொ.சி. அவர்கள் உதவி செய்துள்ளதை இன்றளவும் மறக்க முடியாது. திரு.மங்களகிழாரிடம் தமிழை பயின்ற பல மாணாக்கர்களுக்குத் தமிழ்ப்புலவர் பயிற்சி ரே பெற உதவி செய்து அம்மாணவர்களுக்கு ஆந்திரத்திலேயே சித்தூர் மாவட்டத்தில் தமிழ் ஆசிரியர் பணி கிடைத்தது. அவர்கள் வாழ்வில் ஒளி விளக்காய் திகழ்ந்தவர் திரு.ம.பொ.சி. பெருந்தகையாகும்.*

**வடசேரி ஐயம்பெருமாள் சுப்பிரமணியம் அவர்களின் தமிழ் பணி**

*திராவிடப் பல்கலைக்கழகம் இந்தியாவில் ஆந்திர பிரதேசத்தில் சித்தூர் மாவட்டத்தில் குப்பத்தில் அமைந்துள்ள இந்தியாவில்மொழிகளுக்காக அமைந்திருக்கும். ஒரே பல்கலைக்கழகம் ஆகும். இது 1997 ஆம் ஆண்டு ஆந்திர பிரதேச அரசால் தமிழ்நாடு கர்நாடகா, கேரளா அரசுகள் உதவியுடன் அமைக்கப்பட்டது. மொழிக்கல்விக்கும், சமூக நல்லுணர்வுக்கும் பணி புரிவதற்காக இப்ப பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. ஒரு மொழி குடும்பத்திற்காக இந்தியாவில் செயல்படும் ஒரே பல்கலைக்கழகம் இதுவாகும். இப்பல்கலைக்கழகத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற திராவிட மொழித் துறைகளும் திராவிடவியல் தொடர்பான வரலாறு, மொழியியல், தத்துவம், நாட்டுப்புறவியல் மற்றும் அறிவியல் சார்ந்த துறைகளும் உள்ளன. பதிப்புத்துறை மூலம் பல ஆய்வு நூல்களை வெளியிடுகின்றது.*

**பேராசிரியரின் முயற்சி**

*திராவிட பல்கலைக்கழகம் தோன்றுவதற்கு 1988 ஆம் ஆண்டு அலுவல் காரணமாக ஐதராபாத் சென்ற பேராசிரியர் ஐ.ஏ.எஸ் காசிப் பாண்டியனை சந்தித்தார். பன்னாட்டு திராவிட மொழியியல் நிறுவனம் சம்பந்தமாக உரையாடலை தொடங்க காசி பாண்டியன் அவர்கள் திராவிடப் பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பித்தால் என்ன? என்று பேராசிரியரை கேட்க அவரும் சம்மதித்து அதற்கான முயற்சியில் ஈடுபட்டார். அப்போதைய முதல்வர் நந்தமுரி தாரக ராமாராவ் அவர்களிடத்தில் விவரிக்க பெருந்தகையான முதல்வரும் ஒப்புதல் தந்தார். இந்த அறிய முயற்சிக்கு வித்து போடப்பட்டது. அதற்காக நீதியரசர் திரு ஆவுல சாம்பசி வராவ் தலைமையில் ஒரு குழு நிறுவப்பட்டு, அதற்கு பேராசிரியர் வி.ஐ.எஸ் அமைப்பாளர் என்ற பொறுப்புடன் தமிழ்நாட்டு கல்லூரி முன்னாள் இயக்குனர் திரு மோகனரங்கம், மைசூர் மகாராஜா கல்லூரி முன்னாள் முதல்வர் திரு சாந்தவீரப்பா ஆகிய இருவரும் அதன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.*

*முதல் அமைச்சராக இருந்த நந்தமுரி தாரக ராமாராவ் காசி பாண்டியன் ஐ.ஏ.எஸ் அவர்களின் திறமையையும் நேர்மையையும் நன்றாக அறிந்திருந்த காரணத்தால் இப்பபல்கலைக்கழகம் தோன்றுவதற்கு உத்தரவிட்டார். அதுமட்டுமின்றி ஆந்திர மக்களுக்கு தெலுங்கு மொழி பண்பாடு முதலியவற்றில் அளவில்லாத பற்றி இருப்பதை அறிந்து இத்திட்டத்தை நிறைவேற்ற உடன்பட்டார்.*

**திராவிடப் பல்கலைக்கழகத்திற்கான இடம் தேர்வு**

*1988 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் வி.ஐ.சுப்பிரமணியரும் காசி பாண்டியனும் ஆந்திர மாநிலத்தில் சித்தூர் மாவட்டத்தில் குப்பம் அருகில் உள்ள குடிப்பள்ளி எந்த கிராமத்தில் 1090*

*ஏக்கர் நிலம் மலைப்பகுதி, பசுஞ்சோலை பல்கலைக்கழக அமைப்பிற்கு உகந்த இடமான அரசு நிலம் தேர்வு செய்யப்பட்டது.*

**அன்பழகனார் ஒத்துழைப்பு**

*கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்த சமயத்தில் பேராசிரியர் க. அன்பழகனார் அவர்கள் கல்வித்துறை அமைச்சராக பணியாற்றினார். அச்சமயத்தில் திராவிட பல்கலைக்கழகம் தோன்றுவதற்கு ஊன்றுகோலாக இருந்ததை அறிய முடிகிறது.*

**கருத்துக்குழு கூடுதல்**

*1989 ஆம் ஆண்டு ஜனவரி மூன்றாம் நாள் பெங்களூரில் திராவிட பல்கலைக்கழக கருத்து குழு கூடியது. உறுப்பினர்களின் போக்குவரத்துச் செலவை திருவனந்தபுரத்தில் உள்ள பன்னாட்டு திராவிட மொழியியல் நிறுவனம் ஏற்றது. பெங்களூர் கூட்டத்திற்கு பின்னர் திராவிட பல்கலைக்கழகச் சட்ட வரைவை பேராசிரியர் வி.ஐ சுப்பிரமணியனார் மகளும், பன்னாட்டு திராவிட மொழியில் நிறுவன தட்டசகரும், தட்டச்சு செய்த சுருக்கப்படிகள் உறுப்பினர்களின் ஆய்வுக்கூடத்திற்கு முன்னரே அனுப்பப்பட்டன. அது மட்டும் இன்றி பெங்களூரில் நடந்த கூட்டத்தில் திராவிடம் என்பதற்கு பதிலாக தென்னாட்டு மொழிகள் ஆய்வு என்ற பெயரை சூட்ட முயற்சித்தனர். பேராசிரியர் வி.ஐ. சுப்பிரமணியனார் அவர்கள் முயற்சியினால் திராவிடப் பல்கலைக்கழகம் என்ற பெயரே உருப்பெற்றது. குப்பத்தில் இப்பபல்கலைக்கழகம் தோன்ற காரணம் மூன்று மொழி மாநிலங்களும்( தமிழ்,தெலுங்கு, கன்னட) ரயில் நிலையம், விமான நிலையம் குடிநீர் வளமாக கிடைப்பது முதலியவற்றை நீதியரசர் நிரல் படுத்தி அறிக்கையை பூர்த்தி செய்தனர்.*

*1989 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் நாள் திராவிட பல்கலைக்கழக அறிக்கையை முதலமைச்சர் என்.டி.ஆரிடம் நீதியரசர் சாம்பசிவராவ் ஒப்படைத்தார். முதலமைச்சர் மிகவும் மகிழ்ந்து அதனை நடைமுறைப்படுத்தும் திட்டம் ஒன்று கொடுக்குமாறு கூறினார். எனவே அந்த வரைவுக்குழுவை செயல்பாட்டு குழுவாக மாற்றிப் பன்னாட்டு திராவிட மொழியியல் நிறுவனத்தின் மேற்பார்வையில் அந்தக் குழு தனது பணியினை செய்ததை அறிய முடிகிறது.*

**ஆந்திர அரசியலில் மாற்றம்**

*ஆந்திரா அரசியலில் எதிர்பாரா விதமாக அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன. திரு என்.டி.ஆரின் தெலுங்கு தேச கட்சி தேர்தலில் சிறுபாண்மையாக மாரி காங்கிரஸ் கட்சி அரசு பொறுப்பேற்று திரு. சென்னா ரெட்டி முதலமைச்சர் ஆனார். தமிழகத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பதவிப் பொறுப்பேற்றது. காங்கிரஸ் கட்சி மைய அரசின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. இக்காரணத்தால் குப்பம் திராவிட பல்கலைக்கழகத் திட்டம் தேக்கம் கண்டது. இக்காரணத்தால் பல்கலைக்கழகம் உருவாவதற்கு மிகவும் தாமதமானதை அறிய முடிகிறது. தமிழக அரசில் திரு. நெடுஞ்செழியனார் நிதி அமைச்சராகப் பொறுப்பு வகித்தார். திரு. அரங்கநாயகம் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவர்கள் இருவருக்கும் திராவிட பல்கலைக்கழக அமைப்பு பற்றி தெரியும். ஆனால் அன்றுள்ள சூழலில் அவர்களால் எந்த திட்டத்தையும் செயல்படுத்த இயலாது. ஆனால் செய்திகளை அவ்வப்போது அறிந்து கொண்டனர். அவர்கள் பேராசிரியர் வி.ஐ.சுப்ரமணியனாரிடம் கூறிய கருத்துக்களை அன்பழகன் அவர்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தினார்.*

**முதல்வர் ஜனார்த்தன ரெட்டியின் ஒப்புதல்**

*திரு. ஜனார்த்தன ரெட்டி முதல்வராக இருந்தபோது இந்தத் திட்டத்தை வரவேற்றார். ஆனால் நெல்லூரில் இப்ப பல்கலைக்கழகத்தை ஆரம்பித்து விட முடியுமா? என்று கேட்டார் வி.ஐ. சுப்பிரமணியரும் அவ்விடத்தை நேரில் சென்று பார்த்தார். அவ்விடத்தில் வீடுகள் வரிசையாக கட்டியிருந்த காரணத்தாலும், அங்கு குடும்பம் யாரும் இல்லாத காரணத்தாலும் திராவிட பல்கலைக்கழகம் அவ்விடத்திற்கு பொருந்தாது என பேராசிரியர் கடிதத்தில் விவரமாக எழுதி விட்டார். அடுத்து ஓங்கோல் எந்த ஊரில் ஏறத்தாழ 600 ஏக்கர் நிலம் இருக்கிறது என்றனர். அங்கு சென்று பார்த்த போது ஊருக்கு வெளியே 10 கல் தொலைவில் இருக்கும் புறம்போக்கு நிலம் இதுவும் பொருந்தாது என இராமச்சந்திர ராவ், இந்திய உணவுக் கழக அதிகாரி செல்லப்பா, ராமகிருஷ்ணா ரெட்டியும், பேராசிரியர் அவர்களும் அரசுக்கு தெரிவித்தனர்.*

*திரு. காசி பாண்டியனின் தூண்டுதலால் ஐதராபாத்தில் முதல்வராக இருந்த ஜனார்த்தன ரெட்டி கூட்டம் ஒன்று கூட்டி, எதற்கு திராவிட பல்கலைக்கழகம்? அதுவும் ஆந்திராவில் என பல கேள்விகளை கேட்டார். அதற்கு பேராசிரியர் அவர்கள் அளித்த பதிலால் சில நாட்கள் கழித்து 1090 ஏக்கர் குப்பத்தில் ஒதுக்குவதாகவும் ரூபாய் 20 லட்சம் இந்த நிதியாண்டில் இந்நிறுவனத்திற்கு தந்திடுவதாகவும் அறிக்கை வெளியிட்டார். எல்லா முதலமைச்சர்களும் ஒரு நிறுவனம் துவங்குவதற்கு முன்னர் ஒப்புக்கொண்டு நிதி ஒதுக்கீடு செய்வது எளிதன்று; நிறுவனம் தோன்றிய பின் சிலர் சேரலாம் என்று கூறிய ஆலோசனையைக்கேட்ட திரு.அர்ஜுன் சிங் திராவிட நிறுவனத் திட்டத்திற்கு ஒத்துக்கொள்ளுமாறு தமிழக முதல்வரை அரசு விருந்து ஒன்றில் சந்தித்தபோது கேட்டு அவரும் ஒப்புக்கொண்டு விட்டதாக கூறினார். ஆனால் தமிழக முதல்வரின் கடிதம் இந்தத் திட்டத்தை ஒப்புக்கொண்டதாக தெரிவித்துவிடவில்லை. எனினும் கல்வி அமைச்சர் தொடர்ந்து முயற்சித்தார். அன்று செயலராக இருந்த தென்னக நண்பர் எவ்வாறெல்லாம் அந்தக்கோப்பை தாமதப்படுத்த முடியுமோ அவ்வாறெல்லாம் முயன்றார். பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு அந்தக் கோப்பை அனுப்பி அதன் கருத்தை கேட்டார். அப்போது அதன் தலைவராக இருந்த திரு இராமரெட்டி ஒரு குழுவை டாக்டர் பைலி தலைமை அமைத்தார். அந்தக் குழு திருவனந்தபுரம் வருமாறு அழைக்கப்பட்டது. அவர்களும் 30-12-1993 இல் வந்தனர். அவர்களிடம் திராவிட ஆய்வுக்கென ஒரு தனி நிறுவனம் தேவையா? அதற்குரிய ஆதாரம் என்ன? எவ்வாறு அமைத்திட வேண்டும்? என்ற கேள்விகளுக்கு விடை தருமாறு மைய அரசு விடை கேட்டது. திருவனந்தபுரத்தில் அந்த குழு பன்னாட்டு திராவிட மொழியில் நிறுவனத்தாருடனும் பிறருடனும் கலந்தாலோசித்து இசை வான அறிக்கை ஒன்றைப் பல்கலைக்கழகம் மானியக்குழுவிற்குக் கொடுத்தது. அந்தக் குழுவின் செயலாளராக வந்த கங்கூர் டேயைப் பின்னர் மானிய குழுவில் பேராசிரியர் வி.ஐ. சுப்பிரமணியனார் அவர்கள் சந்தித்து அந்த அறிக்கையின் ஒரு படி மட்டும் இருப்பதால் அதனை விரைவாக படித்து ஓர் நகல் காப்பி எடுத்து அவரிடம் கொடுத்தார்.*

**அரசியல் மாற்றம் நிகழ்ந்தது**

*நந்தமுரி.தாரக.ராமராவ் மீண்டும் முதலமைச்சரானார். சில மாதங்களுக்குள்ளேயே காசிப் பாண்டியனின் தூண்டுதலால் அவர் மீண்டும் வி.ஐ. சுப்பிரமணியனார் அவர்களை அழைத்தார். நெடுநாள் கிடப்பில் கிடக்கும் திட்டம் இது. எனவே இதனை செயல்படுத்த வேண்டும். இது கல்வி நிறுவனமாக இருப்பதைவிட பல்கலைக்கழகமாக இருக்க வேண்டும். இந்த நிதி ஆண்டில் 1.75 கோடி ஒதுக்கினார். உடனே பல்கலைக்கழகம் குப்பத்தில்*

*உருவாக்கப்படும் என்று முடிவெடுத்தார். சென்னையில் இந்த முடிவை கேட்டு அன்பழகன் அவர்களும் மகிழ்ச்சி அடைந்தார். திரு நாரவாரிபல்லி சந்திரபாபு நாயுடு முதலமைச்சரானார். திருப்பதியில் முதலமைச்சர் தலைமையில் திராவிட பல்கலைக்கழக செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அதில் திராவிட பல்கலைக்கழகச் சட்டத்தைச் சட்டசபை நிறைவேற்றுவது என்றும், நிலம் கையகப்படுத்தும் பணியை விரைவாக செயல்படுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.*

**ஆந்திரத்தில் திராவிடப்பல்கலைக்கழக உதயம்**

*ஆந்திர மாநில சட்டசபை திராவிடப் பல்கலைக்கழக சட்ட பேரவை ஒரு மனதாக நிறைவேற்றியது. 1997 நவம்பர் மாதம் முதல் பல்கலைக்கழகம் செயல்படும் என்று கூட்டத்தில் கூறப்பட்டது. ரூபாய் நான்குகோடி ரூபாய் ஒதுக்கி உள்ளதாகவும் சட்ட வரைவில் குறிப்பிடப்பட்டிருந்தது. அப்போது இருந்த ஆந்திர ஆளுநர் பல ஐயங்கள் எழுப்பி சட்டத்தை ஒப்புக்கொள்ளாது காலம் கடத்தினார். திராவிட மொழியியல் மாநாடு சென்னையில் நடந்த போது கலைஞரும் அன்பழகனாரும் 1997 ஜூன் 17ஆம் நாள் அதில் கலந்து கொண்டனர். ஆந்திர ஆளுநர் உடனே அந்த சட்டத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று கலைஞர் வற்புறுத்தினார். அன்பழகனாரும் வாதாடினார். அதைத்தொடர்ந்து ஆளுநர் ஒப்புதல் அளித்தார். தமிழக அரசு 50 இலட்சம் ரூபாயும், கேரளா அரசு 25 லட்சம் ரூபாயும், முதல் தவணையாகக் கொடுத்தன. திரு.காசிப் பாண்டியனின் தூண்டுதலால் நவம்பர் மாதத்தில் திராவிடப் பல்கலைக்கழக துணைவேந்தராக பேராசிரியர் அருணாச்சலமும் இணைவேந்தராக பேராசிரியர் வி.ஐ.சுப்பிரமணியனார் அவர்களும் நியமிக்கப்பட்டனர்.*

*திராவிடப் பல்கலைக்கழகத் திட்டம் நிறைவேற பத்து ஆண்டுகள் பிடித்தது. அந்த கால அளவில் பேராசிரியர் வடசேரி ஐயம்பெருமாள் சுப்பிரமணியம் அவர்களின் பெருமுயற்சியாலும் திரு.காசிப்பாண்டியன் மேனாள் ஆந்திர அரசின் தலைமை செயளாலர் அவர்கள் பேருதவியாலும் இப்பல்கலைக்கழகம் ஏற்பட்டது. வடசேரி ஐயம்பெருமாள் சுப்பிரமணியம் அவர்களின் பெருமுயற்சியாலும் தமிழகத்தின் அருகாமையில் உள்ள ஆந்திர மாநிலமான குப்பத்தில் திராவிடப்பல்கலைகழகம் தோன்றி தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை இயங்கி வருகிறது. இத்துறையில் முதுகலை பட்டம்,முனைவர் பட்டம் பயிலும் வறுமை கோட்டிற்கு கீழுள்ள மாணவர்களுக்கு தமிழக அரசு நிதியுதவி அளிக்கிறது. நிதியுதவி தமிழறிஞரால் தொடங்கப்பெற்ற இப்பல்கலைக்கழகம் வெள்ளி விழாவை நிறைவுசெய்துள்ளது இருபத்தாறு ஆண்டுகள் நிறைவு செய்துக்கொண்டு இருபத்தேழு ஆண்டை தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.*

**பேரசிரியர். ந. சுப்பு ரெட்டியார் அவர்களின் தமிழ் பணி**

*பேரசிரியர். ந. சுப்பு ரெட்டியார் தமிழ்நாடு திருச்சிமாவட்டம். பெரகம்பி என்ற ஊரில் எளிய வேளாண்மை குடும்பத்தில் பிறந்தார். தமிழறிஞரும், எழுத்தாளரும், பேராசிரியருமான இவர் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைகழகத்தில் தமிழ்த்துறையை துவக்கி வைத்ததோடு அப்பல்கலைகழகத்தில் தமிழ்த்துறையில் முதல் முனைவர் பட்டம் பெற்றார். அப்பல்கலைகழகத்தில் 1960-ல் பல இன்னல்களுக்கிடையே தமிழ்த் துறையை நிறுவி 17 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றார். ஆந்திரத்தில் ஏற்பட்ட தமிழ்த் துறை இன்று பெரிய விரிஷ்சமாக மாறி அங்கு பயின்ற மாணக்கர்கள் உயரிய நிலையில் இருப்பதை அறியமுடிகிறது. இவர் எழுதியுள்ள 135 நூல்களையும் தமிழக அரசு நாட்டுடைமையாக்கியுள்ளது குறிப்பிடதக்கதாகும்.*

**தெலுங்கு மாநிலத்தில் தமிழ்ச் சங்கங்கள்**

*திருப்பதி தமிழகத்தில் சேர்ந்தது என்பது தமிழர்களின் வாதம். சென்னை ஆந்திரர்கட்கு வேண்டும் என்பது ஆந்திரர்களின் கோரிச்கை. இதைப்பற்றிய பிரச்சினையே இப்போது இல்லை. நம்முடைய அருமை இராஜாஜி தம்முடைய அரசியல் ஞானத்தால் ஒருவிதமாகத் தீர்த்து வைத்துவிட்டார். திருப்பதி வாதத்திற்கிடமாக இருந்தபடியால், திருப்பதி ஆந்திரத்தில் இணைந்த பிறகு திருப்பதியில் வேர்மட்டத்திலேயே தமிழை இல்லாது செய்து விட்டனர். தமிழ்ப் படித்தவர்கள் கூட்டம் இருந்து கொண்டே இருந்தால் இந்தப் பிரச்சினைக்கு உயிர் இருந்து கொண்டே இருக்கும் என்ற கருத்தைக் கொண்டே வேரில் வெந்நீர் ஊற்றியதுப் போல்'' இந்தப் பிரச்சினையை எப்போதும் எழும்பாது செய்து விட்டனர். தேவஸ்தானக் கலைக் கல்லூரியில் தமிழ் கற்கும் வாய்ப்பு இருந்தது. அதனை அறவே அகற்றிவிட்டனர். கீழ்த்திசைக் கல்லூரி யில் தமிழ் வித்துவான் வகுப்புகள் இருந்து வந்தன, அவற்றையும் இல்லாது ஒழித்தனர். தேவஸ்தான ஆட்சிப் பொறுப்பிலிருந்த நிர்வாக அதிகாரியாக தமிழை அடியோடு ஒழிக்க நினைத்ததை அறியமுடிகிறது.*

*பேராசிரியர் எஸ். கோவிந்தராஜுலு நாயுடு அவர்கள் (முதல் துணைவேந்தர்) பரந்த நோக்கமுடையவர்.தாம் முதல் துணைவேந்தராக நியமிக்கப் பெற்றுப் பணியாற்றி வந்தபோது, இந்த நிலையை நன்கு அறிந்திருந்தார். விரோத மனப்பான்மையோடு செயலாற்றுவதை விட தோழமை கொண்டு செயலாற்றினால் நிறைந்த பயன்உண்டு என்பதை நன்கு அறிந்தவர். திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை இருக்க வேண்டும் என்பது இவர்தம் ''நீள்நோக்கு''. புதிய பல்கலைக் கழகத் தின் ஆட்சிப் பொறுப்பில் தேவஸ்தானத்திற்குப் பெரும் பங்கு இருந்து வந்தது. பல்கலைக்கழக வளாகத்திற்கு நிலம் தந்தவன் ஏழுமலையான் ; தேவஸ்தானக் கல்லூரிக்குச் சொந்தமாக இருந்த கட்டடங்களையெல்லாம் தொடக்கத்தில் உதவியாக இருக்கும் பொருட்டுப் பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைத்தான்.*

*சங்கத்தில் ஓர் இலக்கியச் சொற்பொழிவிற்கு பேராசிரியரை அழைத்தனர். அப்போது பாக்காலாவில் இருப்பூர்தி நிர்வாகத்தின் கீழ் திரு ஜகதீசன் என்ற ஒரு நலவாழ்வு ஆய்வாளர் பணியாற்றி வந்தார்; தமிழ்ப்பற்று மிக்கவராக காணப்பட்டார். நூற்றுக்கு தமிழர்கள் பாக்காலா இருப்பூர்திச் சந்திப்பில் பணியாற்றினர்; ஊரிலும் சில தமிழர்கள் இருந்தனர். இந்த ஊரில் ஒரு தமிழ்ச் சங்கம் இருப்பது பொருத்தம் என்று நினைத்தார். திரு. எ. கோபால கிருஷ்ணன். திரு ஜகதீசன், வேறு சில தமிழன்பர்கள், தமிழ் ஆர்வலர்கள் இவர்களிடம் இந்தக் கருத்தைத் தெரிவித்தார். எல்லோருமே மிக உற்சாகமாக இக்கருத்தை வரவேற்றனர்.*

**பாக்காலாத்தமிழ்ச் சங்கம்**

*ஓரிரு திங்களில் ''பாக்காலாத்தமிழ்ச் சங்கம்! தோற்றுவிக்கப் பெற்றது; விரைவில் பதிவும் செய்யப் பெற்றது. இது அவருக்கு ஒரு நல்ல இலக்கிய மேடையாகத் திகழ்ந்தது. இதன் ஆதரவின் கீழ் பல இலக்கிய விழாக்கள் நடைபெற்றன. தவத்திரு குன்றக்குடி அடிகளார், கோவைத் தொழிலதிபர் திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் மற்றும் அவரது நண்பர் திருச்சி வழக்குரைஞர் திரு. க. அரங்கசாமி ரெட்டியார் இவர்கள் இத்தகைய விழாக்களில் கலந்து சொற்பொழிவுகள் நிகழ்த்த ஏற்பாடு செய்தார். அவரும் வார, மாத நிகழ்ச்சிகளில் அடிக்கடி சுலந்து கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.*

**சித்தூர் தமிழ்ச் சங்கம்**

*சித்தூரிலும் ஒரு தமிழ்ச் சங்கம் தோன்றுவதற்கு ஏற்பாடு செய்தார். ஏகாம்பரக் குப்பம் நகரி போன்ற இடங்களிலுள்ள திரு பொன்னுசாமி முதலியார் போன்ற செல்வச் செழிப்புள்ள*

*சில செங்குந்த முதலியார்களும். சித்தூர், நகரத்திலுள்ள சில பல தமிழார்வலர்களும் சேர்ந்து "சித்தூர்த் தமிழ்ச் சங்கம்" என்ற சங்கத்தைத் தோற்றுவித்தனர்; சங்கமும் பதிவு செய்யப் பெற்றது. இதனை உற்சாகமாகச் செயற்படுத்துவதற்குத் தக்க செயாலாளர் அமையவில்லை. பல ஆண்டுகள் பெயர கம் இருந்து கொண்டு வந்தது. ஒரு சமயம் முதலாண்டு விழா சங்கம் தோன்றிப் பல ஆண்டு கட்குப் பிறகு மிகச்சிறப்பாக நடைபெற்றது.*

*ஜஸ்டிஸ் எம். எம். இஸ்மமாயில் சென்னை உயர்நீதிமன்றம்) இவ்விழாவில் கலந்துகொண்டு பேருரை ஆற்றினார். பேராசிரியரும் இவ்விழாவில் கலந்துக்கொண்டார். சங்க உறுப்பினர்கள் அனைவரும் பெருவணிகர்கள்; தம் தொழிலை விட்டுச் சில சமயம் கூட நிகழ்ச்சிகளை ஏற்படுத்த இவர்களால் முடிவதில்லை ஆதலால் பாக்காலாத் தமிழ்ச்ச ங்கத்தைப் போல் இது நன்கு செயல்படவில்லை. பாக்காலாத் தமிழ்ச் சங்கத்திலுள்ளவர்கள் இருப்பூர்தித் தொழிலாளர்கள், அலுவலர்கள் பணி நேரம் போக மாலை-இரவு நேரங்களில் சங்கக் கூட்டங்களுக்கு உடனே ஏற்பாடு செய்து விடுவார்கள். ஆசிரியர் ஏ. கோபாலகிருஷ்ணன் நல்ல தூண்டுகோலாக இயங்கிகே அடிக்கடிச் சங்க நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுசெய்து விடுவார். குன்றையொட்டிய ஓர் இடத்தில் சங்கத்தி சாந்தமாகவே கட்டடம் ஒன்றும் அமைக்கப்பட்டு விட்டது.*

**குண்டகல் தமிழ்ச் சங்கம்**

*நீண்ட நாட்களாகக் குண்டக்கல்லில் (ஓர் இருப்பூர்தி சந்திப்பு) தமிழ்ச்சங்கம்" நல்ல முறையில் செயற்பட்டு வந்தது. அறிஞர் அண்ணா போன்ற அரசியல் தலைவர்களும் இதில் பங்கு பெற்றிருந்ததைக் கண்டார். இங்கு கூட்டங்கள் நடை பெறுவதற்கு பெரிய அரங்கொன்று இருந்தது. சித்தூர்த் தமிழ்ச் சங்கத்திற்கும்,பாக்காலா தமிழ்ச்சங்கத்திற்கும் இத்தகைய இட வசதியில்லை. பாக்காலாவில் இருப்பூர்தி நிர்வாகத்தைச் சர்ந்த சிறைய அரங்கு இருந்தது. இதில் பெரிய கூட்டம் நடை பெறமுடியாது. 50 பேர் இதில்கூடலாம். இந்த மூன்று சங்கங்களையும் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை ஏற்படுவதற்கு துணை புரியும் மேடைகளாகப் பயன்படுத்திக் கொண்டார்.*

*ஒவ்வோர் இடங்கட்கும் அவரே நேரில் சென்று நிர்வாக சபையைக் கூட்டச் செய்தார். சித்தூர்த் தமிழ்ச் சங்கத்தில் பல இடங்களில் சிதறிக் கிடந்த உறுப்பினர்களை ஒன்று சேர்ப்பதில் மிகவும் சிரமப்பட்டார். ஏனைய இருசங்கங்களிலும் சபைகூட்டுவதில் அதிகச் சிரமம் இல்லை திருப்பதியிலுள்ள பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையின் இன்றியமையாமை குறித்து தீர்மானங்களை நிறைவேற்றச் செய்தார். மேற்படி தீர்மானங்களைத் தட்டச்சு செய்யச் செய்து கடிதத்துடன் 1. தமிழக அரசு 2. தமிழ்வளர்ச்சி இயக்கம் 3.ஆந்திர அரசு இவர்கட்கு அனுப்பச் செய்தார். தானே பொறுப்பேற்று அஞ்சலில் சேர்த்தார்.*

*அயல் மாநிலமான ஆந்திராவில் தமிழை வளர்த்த பெருமை சிலம்பு செல்வர்.ம.பொ.சி வஞானம், வடசேரி ஐயம்பெருமாள் சுப்பிரமணியம், பேரசிரியர். ந. சுப்பு ரெட்டியார் ஆகியோரை சாரும். இவர்கள் ஆந்திர வாழ் மக்கள் தமிழ் மொழியினைக் தமிழை கற்றுகொள்வதற்கு ஏதுவாக பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறையினை ஏற்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு பல இன்னல்களையும் சந்தித்து தமிழ்மொழி அயல் மாநிலத்தில் வளர்ச்சியடைய பாடுபட்டது அறியற்பாலதாகும். இத்தகையோரின் அரிய முயற்சியால் தமிழ்த்துறை இன்றளவும் வளர்ச்சியடைந்ததன் வழியாக பல மாணக்கர்கள் தமிழ்மொழியினை கற்று பல்வேறு துறைகளில் பணியாற்றி வருகினறனர்.*

**பார்வை நூல்கள்**

1. ந.சுப்பு ரெட்டியார் நினைவுக்குமிழிகள் பா.சம்பத்குமார் ம.பொ.சியின் பன்முக ஆளுமை கற்றுகொள்வதற்கு மு.வரதராசன் தமிழ் இலக்கிய வரலாறு கந்தையா பிள்ளை ந.சி செந்தமிழ் அகராதி கதிரைவேற் பிள்ளை தமிழ்மொழி அகரா பூ.சு.கணேஷ்மூர்த்தி மே ஒன்று தஞ்சைத்தமிழ் பல்கலைக் கழகம் வாழ்வியற் களஞ்சியம்

**References**

1. Na.Subbu Reddiar, Ninaivu Kumuzhigal.
2. P.Sambathkumar Ma.Po.Siyin Panmuga Alumai
3. Mu.Varadharajan Tamil Ilakkiya Varalaru.
4. Kandaya PillaiN.S.Senthamiz agaradhi.
5. A.Kadiraiverpillai Tamizhmozhi agaradhi
6. P.S.Ganeshmoorthy May onru
7. Tanjavur Tamil University, Vazviyar Kalanjiyam